# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043, சித்திரை 14

## 2012 ஏப்ரல் 26, வியாழக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தான்ஆம்*
*இன்சொலின் அதே அறம்.”*

*முகம் மலர்ச்சியோடு, இனிமையாகப் பார்த்து, உள்ளன்போடு இனிமை தருகின்ற பயனுள்ள சொற்களைப் பேசுவதே அறம் ஆகும்.*

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**168—**

### அரசு அலுவலகங்கள்

***5947—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பண்ருட்டி நகர வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் கருவூலம், பொதுப் பணி மற்றும் சத்துணவுத் திட்டத் துறைகளுக்கான அலுவலகங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*கடலூர் மாவட்டம், பண்ருட்டி நகர வட்டாட்சியர் அலுவலகத்தில் கருவூலம் உள்ளிட்ட மற்ற அலுவலகங்கள் அமைப்பது குறித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேன்மையாய், மாற்றோர்கள் வியக்கும்வண்ணம் மண்ணுலகில் மாட்சிமையாய் ஆட்சி நடத்தும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்குப் பணிவான வணக்கம். கடலூர் மாவட்டம், பண்ருட்டியில் சார் கருவூலம், பத்திரப் பதிவு அலுவலகம், கோட்டப் பொறியாளர் அலுவலகம், பொதுப் பணித் துறை அலுவலகங்கள், ஊட்டச் சத்து மையம், தொழிலாளர் நல அலுவலகம், வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வணிக வரித் துறை அலுவலகம், கரும்பு அபிவிருத்தித் திட்ட அலுவலகம், நெடுஞ்சாலைத் துறை அலுவலகங்கள் இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலகம் அமைந்துள்ள சுமார் 11 ஏக்கர் நிலப் பரப்பளவில் ஒரே வளாகத்தில் அலுவலகங்கள் அமைத்துக் கொடுத்ததற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியிலே இருக்கக்கூடிய வட்டாட்சியர் அலுவலகம் 2 ஏக்கர் பரப்பளவிலே இருந்துகொண்டிருக்கிறது. அங்கே தினந்தோறும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வந்து சென்றுகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கழிப்பறை கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பாபு முருகவேல், இப்போது இதை நான் admit பண்ணுகிறேன்.*

2012 ஏப்ரல் 26]

நான் உங்களுக்கு ஏற்கெனவே சொல்லிவிட்டேன்; மூலக் கேள்வியை ஒட்டி நீங்கள் துணைக் கேள்வி கேளுங்கள் என்று. இது actual ஆக அலுவலகங்கள் அமைப்பது பற்றியது. கழிவறை கட்டுவது பற்றி அல்ல. இருந்தாலும் Minister answer பண்ணுவதற்கு நான் allow பண்ணுகிறேன். இனிமேல், இந்த practice வைத்துக்கொள்ளாதீர்கள். (குறுக்கீடு) அமைச்சர், நீங்கள் பதில் சொல்லிவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையினுடைய மானியக் கோரிக்கையின்போதே நான் குறிப்பிட்டிருக்கிறேன். மனித நேயம் மிக்க தலைவியாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் கழிப்பறை வசதிகள், அங்கே வருகின்றவர்கள் அமர்வதற்கு இருக்கைகள், ஊனமுற்றோர்களாக இருந்தால் அவர்களுக்கு சாய்வு தளங்கள், குடிநீர் வசதிகள் அனைத்தும் செய்வதற்காக அனுமதி அளித்திருக்கிறார்கள். அதை நான் அன்றைக்கு அறிவிப்பிலே வெளியிட்டிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**169—**

**குடிநீர்த் திட்டம்**

***4415—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, கடையம், பாப்பாக்குடி ஆகிய ஒன்றியங்களில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.